# பிரகலாதன்

திருவல்லிக்கேணி, கெல்லட் ஹை ஸ்கூல்
தமிழாசிரியர்
ம. க. ஜயராம் நாயுடு
எழுதியது

ரா. லோகநாதம் பிள்ளை,
76, வால் டாக்ஸ் ரோட்டு,
சென்னை.
1926 [விலை அணா 3

# பிரகலாதன்

திருவல்லிக்கேணி, கெல்லட்டு ஹைஸ்கூல்
தமிழாசிரியர்
ம. க. ஜயராம் நாயுடு
எழுதியது

THE REGISTRAR OF
30 JUN 1926
MADRAS

துரைத்தனத்தார் அங்கீகரித்தது

ரா. லோகநாதம் பிள்ளை
76, வால்டாக்ஸ் ரோட்
சென்னை
1926

காபிரைட்] [விலை அணா 3



# பிரகலாதன்

## 1. இரணியனது தன்மையும், பிரகலாதனது பிறப்பும்

எல்லா உயிர்களையும் படைக்கும் கடவுளாகிய பிரம்மதேவர் திருமாலின் உந்தியினின்று தோன்றினர். அந்தத் தேவருக்கு மைந்தனாகிய மரிசிமுனிவருக்குக் காசியபர் என்னும் மைந்தரொருவர் இருந்தார். முனிவருக்குப் பதின்மூன்று மனைவியர் இருந்தனர். அவர்களுள் திதி என்பவள் ஒருத்தி. காசியப முனிவருக்குத் திதி என்பவளிடம் இரணியன், இரணியாக்கன் என்னும் கொடிய ஆண்மக்கள் இருவர் பிறந்தனர்.

அவருள், மூத்தவன் பொன் மயமான உடலை யுடையவனா யிருந்தமையால் இரணியன் என்று பெயரிடப்பட்டான். இளையவனுக்குப் பொன் மயமான கண்கள் இருந்தமையால் இரணியாக்கன் என்னும் பெயரைக் கொண்டான். அவ்விருவரும் மிகக் கொடியவரா யிருந்தனர். இளம் பருவத்தில் இரணியன் பிரம்மதேவரிடம் கல்வி கற்றான். அந்த இரணியன் மகா பலசாலி. அவனது தோள் வன்மையைக்

கேட்கும்போதே நமக்குப் பயமுண்டாகும். சூரியன் உதிக்கின்ற உதயகிரி, சூரியன் ஒடுங்குகின்ற அஸ்தமனகிரி என்னும் இரண்டு பெரிய மலைகளையும் அந்த இரணியன் தனது இரண்டு காதுகளுக்கும் கடுக்கன்களாக அணிந்தான். திருப்பாற்கடலைக் கடைய மத்தாக உபயோகித்த பெரிய மந்தரமலையை அவன், தன் கையில் தடியாகச் சில நாட்கள் பிடித்திருந்து பின்பு அது தனக்குப் பாரம் போதாதென்று எறிந்துவிட்டான். எட்டுத் திக்குகளிலும் இப்பூமியைத் தாங்கிக் கொண்டிருக்கின்ற ஐராவதம் முதலிய பெரிய யானைகள் எட்டையும், சுண்டற்காய் போல அலட்சியமாக எடுத்து, ஒன்றன்மேல் ஒன்றை விட்டெறிந்து விளையாடுவான். அதிக ஆழத்தையும் அகலத்தையும் உடைய ஏழு சமுத்திரங்களையும் அவன். கணைக்காலளவு ஆழமுடையதென்று எண்ணித் தனது கால்களால் நடந்து அவைகளை கடந்து கரை யேறுவான். ஒரு கரையிலிருந்து மற்றொரு கரைக்கு ஒரே தாண்டாகத் தாண்டியும் செல்வான். மூன்று லோகங்களிலும் தனக்கு எதிர் ஒருவரும் இலர் என்று கர்வங் கொண்டு அவன், எல்லாரும் தன்னைக் கண்டவுடனே பயந்து நடுங்கும்படி திரிந்து வருவான். அவனும் அவனது தம்பியும் ஒன்று சேர்ந்து தேவர்கள் முதலிய நல்ல

வர்களுக்குப் பல தீமைகள் செய்யலாயினர். தாங்களே தெய்வங்கள் என்று சொல்லி எல்லாரையும் தங்களை வணங்கும்படி கட்டளை யிட்டனர்.

இரணியன் கயாது என்னும் பெண்ணை விதி முறைப்படி கல்யாணஞ் செய்துகொண்டு மிக்க கர்வத்துடன் வாழ்ந்திருந்தான். அவனது தம்பியாகிய இரணியாக்கன் மிக்க கர்வங் கொண்டு பூமியைப் பாயைப்போலச் சுருட்டிப் பாதாள லோகத்திற் கொண்டுபோய் வைத்தான். அப்பொழுது பூமிதேவி, தனக்கு நேர்ந்த துன்பத்தைப் போக்கும்படி திருநாராயணனைத் துதித்தாள். அம் முழுமுதற் கடவுள், பூமிக்கும் ஆகாயத்திற்கும் ஒரே அளவாக ஒரு பெரிய பன்றி வடிவ மெடுத்துப் பாதாளலோகஞ் சென்று, இரணியாக்கனைத் தமது நீண்ட கோரைப் பற்களால் குத்திக் கொன்றார். பிறகு அக்கடவுள், பாதாளத்தி லிருந்த பூமியைத் தமது கோரைப் பற்காளால் தூக்கிக்கொண்டு வந்து முன்னிருந்தபடியே நிலை நிறுத்திப் பூமிதேவியின் துன்பத்தை யொழித்துச் சென்றார்.

தனது தம்பி பாதாள லோகத்தில் இறந்ததைக் கேள்விப்பட்டு இரணியன், அதிக துக்கமும் வெட்கமும் அடைந்தான்; நாராயணனைக் கொல்லவேண்டு மென்றும் நினைத்தான். அந்த இரணியனது மூடத் தன்மையை என்னவென்று

சொல்லலாம்? கடவுளுக்கு அழிவும் உண்டோ? அவரைக் கொல்ல அந்த இரணியனால் ஆகுமா? எவ்விடத்தும் பரந்து கரந்திருக்கும் பரந்தாமனைக் காண அவனால் முடியுமா? பாதகனான அந்த இரணியனுக்குக் கர்வத்தினால் இக்கெட்ட எண்ணம் உண்டாயிற்று. பின் கேடு வரும் என்பதற் கறிகுறியாக முன்னே மதி கெட்டுவரலாயிற்று.

நல்ல வரங்களைப் பெற்றுத் தானே கடவுளாக விளங்க வேண்டும் என்னும் கெட்ட எண்ணம் இரணியனது மனத்தில் தோன்றிற்று. அவன் அவ்வாறே தவஞ்செய்யக் கருதினான். அவனது மனைவியாகிய கயாது என்பவள் அக்காலையில் கருப்பவதியா யிருந்தாள். அவளை அரண்மனையில் விட்டு இரணியன், தனியே சென்று மலைகளும் மரங்களும் நிறைந்த ஓர் இடத்தில் பிரம்மதேவரைக் குறித்துக் கடுந்தவம் செய்யலானான்.

இரணியன் தவம் செய்யச் சென்ற பிறகு தேவர்களுக்கு அரசனான இந்திரன், "பாவியாகிய இரணியனுக்குப் பிள்ளை பிறந்தால், அப்பிள்ளையும் அவனது தந்தையைப் போலவே தேவர்களுக்கும் மற்றுமுள்ள நல்லவர்களுக்கும் தீங்குகள் பல செய்வான்" என்று தனக்குள் எண்ணிக் கயாதுவைக் கொல்லக் கருதி, அவளி

ருக்கு மிடம் தேடிச் சென்றான். அந்நேரம் கயாது தனது அரண்மனையில் ஓர் இடத்தில் அயர்ந்து தூங்கிக்கொண் டிருந்தாள். அவள் தூக்கத்தி லிருப்பதைக் கண்ட இந்திரன், அவளை வெட்ட எண்ணங்கொண்டு தனது கையி லிருந்த வச்சிராயுதத்தை உயர வெடுத்தான். அப் பொழுது, இந்திரனுக்கு முன்பு நாரதர் திடீ ரென்று தோன்றி, இந்திரனது கையைப் பிடித் துக்கொண்டு, “அப்பா தேவ ராசனே! இம் மாதைக் கொல்லாதே. இவள் வயிற்றிலிருந்து பிறக்கும் பிள்ளையால் யாருக்கும் ஒரு சிறிதும் துன்பம் உண்டாகாது. இவள் வயிற்றிலிருந்து உதிக்கும் பிள்ளை, நற்குண நற்செயல்களை யுடையவனாயும், நாராயணனை வழிபடும் அன்பில் உயர்ந்தவனாயு மிருப்பான். அந்தப் பிள்ளையி னால் உனக்கும் எல்லா லோகங்களுக்கும் நன் மையே விளையும். அப்பிள்ளையை இவ்வுலகத் தில் திருநாராயணனுக்கு உண்மைத் தொண்டன் என்று எல்லாரும் புகழ்ந்து கொண்டாடுதலை இன்னும் சில நாட்களுக்குள் நீ கேட்டு மகிழ் வாய். அந்த உத்தமனால் அவனது தந்தை யும் மடியப் போகிறான்,” என்று கூறி, இந்திரனைச் சுவர்க்கத்துக்குத் திரும்பிப் போகச் செய்தார். அயர்ந்து தூங்கும் கயாதுக்குப் பக் கத்தில் நாரதர் சென்று, அவள் அறியாவண்

ணம் அவளது வயிற்றில் இருக்கும் பிள்ளைக்கு ஸ்ரீமந் நாராயணனை வழிபடும் மந்திரத்தை உபதேசித்து வெளியே சென்றார்.

நாரதர் அரண்மனையை விட்டகன்றதும் கயாது தூக்கத்தினின்று எழுந்திருந்து சுகமாக வாழ்ந்திருந்தாள். சில நாட்கள் சென்ற பின்பு அம்மாது, நல்லதொரு நாளில் ஓர் ஆண் பிள்ளையைப் பெற்றுப் பெருமகிழ்ச்சி யடைந்தாள். அந்தப் பிள்ளை பிறந்த காலத்தில் தேவர்கள் மலர் மாரி சொரிந்தார்கள்; அந்தர துந்துபிகள் முழங்கின. தேவர்களும் முனிவர்களும், "நமக்கு இன்றுதான் கடவுள் அருளால் நல்ல காலம் பிறந்தது. இரணியன் அழியப்போகிறான்," என்று சொல்லிக் களித்துக் குதித்துக் கூத்தாடினார்கள்; அந்தப் பிள்ளை இனிதாக வாழ ஆசி கூறினார்கள். இரணியனது குல குருவாகிய சுக்கிராசாரியார் முதலியோர் அந்த அருமைப் பிள்ளைக்குப் 'பிரகலாதன்' என்னும் அரிய பெயரை யிட்டனர். பிரகலாதன் சுக்கில பட்சத்துப் பிறைச் சந்திரனைப்போல் வளர்ந்து வருவானான்.

---

## 2. இரணியன் அரிய வரங்களைப் பெறுதல்.

பிரம்ம தேவரைக் குறித்து இரணியன் நெடு நாட்கள் வரையில் கடுந்தவம் செய்தான். அந்தத் தவத்திற்குப் பிரம்ம தேவர் மகிழ்ந்து இரணியன் முன் தோன்றி, அவனை நோக்கி, "அப்பா! உனது தவத்தைக் கண்டு மிக்க களிப்படைந்தேன். உனக்கு வேண்டிய வரங்களைக் கேட்டுப் பெற்றுக்கொள்," என்று கூறினர். அப்பொழுது இரணியன், பிரம்ம தேவரைப் பார்த்து, "ஏ தேவா! நான் கேட்கும் வரங்களை எல்லாம் தாங்கள் இல்லை என்னுது தரல் வேண்டும்" என்று சொல்லப், பிரம்மதேவரும் அதற்கு உடன்பட்டார். பின்னர், பிரம்ம தேவரிடம் இரணியன் பல அரிய பெரிய வரங்களைக் கேட்டுப் பெற்முன்.

இரணியன், தான் பெற்ற வரத்தினுல், ஆண்களாலும் பெண்களாலும் ஆணும் பெண்ணும் அல்லாத அலிகளாலும் சாகமாட்டான். உடம்பினுள்ளே பொருந்திய உயிரை யுடைய எல்லாப் பொருள்களினுலும், உயிர் இல்லாத எல்லாப் பொருள்களினுலும் அவன் மரண மடையான். அவன் மண்ணிலும் மடியான்; நீரிலும் சாகான்; நெருப்பிலும் வேகான்; காற்றிலும் இறவான்; ஆகாயத்திலும் அழியான். மண்ணுலகத்துக்கு மேலுள்ள மலை முதலிய எல்லா இடங்களிலும்,

புவர் லோகம் முதலிய எல்லா லோகங்களிலும் அவனுக்கு இறப்பில்லை. தேவர்களாலும், இயக்கர்களாலும் அவனைக் கொல்ல முடியாது. திருமால், பிரமன் சிவன் ஆகிய மூவரும் ஒன்று சேர்ந்தாயினும் அல்லது தனித்தாயினும் அவனைக் கொல்ல முயற்சித்தாலும் அவன் உயிர் மாயான்; அவனுடைய வலிமையும் குறையாது; மனிதர்கள், மிருகங்கள், பறவைகள் முதலிய பல ஜீவராசிகளாலும் அவனுக்கு மரண மில்லை. முக்கால வரலாறுகளையும் அறியவல்ல தேவர்களும், முனிவர்களும், மற்றை யோகிகள் முதலியோரும் இடுகின்ற சாபங்களும் அவனைச் சேரமாட்டா. அவனுக்கு அகத்திலும் சாவில்லை; புறத்திலும் சாவில்லை; இரவிலும் சாவில்லை; பகலிலும் சாவில்லை; தெய்வத்தன்மை பொருந்திய சக்கராயுதம், வேலாயுதம், எமதண்டம், எமபாசம், பிரமதண்டம், பிரமாஸ்திரம், நாராயணாஸ்திரம், பாசுபதாஸ்திரம், இந்திராஸ்திரம், அக்கினியாஸ்திரம், வருணாஸ்திரம், நாகாஸ்திரம், மாயாஸ்திரம் முதலிய பலவகை ஆயுதங்களும் அவனைக் கொல்ல மாட்டா. எல்லாப் பிராணிகளையும் கொல்லும் தேவனாகிய யமன் வந்து பிடித்துக்கொண்டு போனாலும் அவன் சாகமாட்டான்; என்றால், இனி அவனுடைய உயிரை மாய்க்க யாவர் உளர்? ஐந்து பூதங்களும் ஒன்றாய்க் கூடி ஓர்

உருக்கொண்டு வந்தாலும் அவன் இறவான். நான்கு வேதங்களிலும் சொல்லப்பட்டுள்ள மந்திரங்களாலும், எல்லாவகை மருந்துகளாலும் அவன் மாளான். பெற்ற தந்தையே வந்து தனியே இரகசியமாக அவனைக் கொல்ல முயன்றாலும் அவன் உயிர்விடான். இத்தகைய அரிய பல வரங்களைப் பெற்று இரணியன், எல்லா உலகங்களுக்கும் தான் ஒருவனே தலைவனாகி, யாவரும் தனக்கு எதிரில்லாமலும் விளங்குவானானான்.

தனது தவத்தொழிலை விட்டொழித்து மனைவி யிருக்குமிடத்துக்கு வந்தான. தனது அரண்மனையை யடைந்தவுடன் தன் பிள்ளையைப் பார்த்து அவன் அளவிலா மகிழ்ச்சி யடைந்தான். பின்னர், அந்த இரணியன் அப்பிள்ளையை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தான். ஒவ்வொரு நாளும் பிரகலாதனுடன் கொஞ்சிக் குலாவி விளையாடிக் களித்த பிறகே அந்த இரணியன் தனது வேலைகளைக் கவனிப்பான்.

---

## 3. பிரகலாதன் ஆசிரியரை மறுத்துக் கூறல்

---

**ஊ**ழிக்காலத்திற்கு மேலும் அழியாத ஆயுளையுடையவனும், எல்லா உலகத்தவரும் தனது பாதங்களை வணங்க ஏக சக்கராதிபதியுமா

யும் இருந்த அந்த இரணியன், தனது மகனாகிய பிரகலாதனுக்குக் கல்வி கற்பிக்க எண்ணங் கொண்டான். பிரகலாதனுக்கு ஐந்து வயதானதும் இரணியன் மனமகிழ்ச்சி கொண்டு உருகி, அவனைப் பார்த்து, "அப்பா எனது அருமைப் பிள்ளாய்! நீ கல்வி கற்று எல்லாச் சாஸ்திரங்களிலும் பண்டிதனாக விளங்கவேண்டும். உனது கல்வித் திறமையைக் கண்டு யான் இன்பம் அடையவேண்டும்" என்று சொல்ல, அறிவுடையவர்களுக் கெல்லாம் மேலாகிய அறிவினையுடைய அம்மகனும் படித்தற்கு உடன்பட்டான். உடனே இரணியன், கல்வியும் விவேகமுமுடைய அசுரகுருவான சுக்கிராசாரியரது புத்திரனான சண்டாமார்க்கன் என்பவனை அழைப்பித்து அவனைப் பார்த்து, "நீ என் கண்மணியாகிய பிரகலாதனுக்குக் கல்வி கற்பிக்கவேண்டும். எனது அருமருந்தன்ன இப்பிள்ளை எல்லாவகைக் கல்விகளிலும் நிகரற்ற பண்டிதனாகி விளங்கவேண்டும்" என்று கூறினான்.

அந்த உபாத்தியாயன் பிரகலாதனைத் தன்னுடன் அழைத்துச்சென்று கல்விக் கழகத்தையடைந்தான். அவ்விடத்தில் பிரகலாதனுக்குக் கல்வி கற்பிக்கத் தொடங்கி அவனை நோக்கி அந்த உபாத்தியாயன், "அப்பா! இரணியாயநம என்று உனது தந்தையின் பெயரைச் சொல்லித் துதி"

என்று சொன்னான். அம்மொழிகளைக் கேட்டதும், பிரகலாதன் தனது இரண்டு காதுகளையும் தன் கைகளால் மூடிக்கொண்டு, சண்டாமார்க்கனைப் பார்த்து, " ஐயா அறிவுடைய பெரியவரே! நீர் சொன்னவை நல்லவை யல்ல. நீர் வேதங்களை ஓதவில்லை என்று தெரிகிறது. வேதத்தின் முடிவில் சொல்லப் பட்டிருக்கிற பரம்பொருளின் பெயரை யல்லவா சொல்லவேண்டும்?" என்று கூறி, உபாத்தியாயனை மறுத்து, " ஹரி ஓம் நமோ நாராயணாய " என்று சொல்லித், தலைமேல் கைகளைக் கூப்பி, நாராயணனைத் துதித்து நின்றான். அப்பொழுது சண்டாமார்க்கன் உடல் நடுங்கிப் பிரகலாதனைநோக்கி, " என்னடா துரோகி! நீ கெட்டதும் அல்லாமல் எங்களையும் கெடுத்து விட்டனையே! அடா பாவி! பிரமன் முதற் கொண்டு யாவராலும் சொல்லுகிறதற்கு அடாததாயும், அயோக்கியமானதாயும் இருக்கின்ற ஏதோ ஒன்றைச் சொல்ல உனக்குப் புத்தி பிறந்ததே. அப்பெயரைச் சொல்ல உனது நாக்கும் எழுந்ததே. அடே குடிகேடா! அக்கிரமம் செய்ய நினைத்தாயே" என்று கோபத்துடன் கூறினான்.

" ஐயா உபாத்தியாயரே! நான் சொன்னதை நீர் தெரிந்து கொள்ளாமல் ஏன் வீணாக இவ்வாறு பேச ஆரம்பித்து விட்டீர்? நான், என்னை உய்யும்படி செய்துகொண்டேன்; பின்பு எனது

தந்தையையும் உய்யும்படி செய்தேன்; அப்பால் உங்களையும் உய்யும்படி செய்தேன். வேதம் ஓதுகிறவர்கள் முதலிலும் முடிவிலும் அந்த வேதத்தின் முதற் பொருளாகிய ஸ்ரீ ஹரியைத் துதிக்க நீர் கண்டதில்லையா? நானும் அவ்வாறே முதலில் முழுமுதற் கடவுளாகிய ஸ்ரீமந் நாராயணனைத் துதித்தேன். நான் சொன்னதில் குற்றமென்ன இருக்கிறது?” என்று பிரகலாதன் சண்டாமார்க்கனை நோக்கிக் கூறினன். அதற்குச் சண்டாமார்க்கன், “அடே பையலே! தேவர்களுக் கெல்லாம் தலைவனுயிருக்கின்றவன் இந்திரன். அந்த இந்திரன் முதலான தேவர்களுக் கெல்லார்க்கும் தலைவர்களா யிருக்கின்றவர்கள் மும்மூர்த்திகள். அந்த மும்மூர்த்திகளுக்கும் தலைவனு யிருக்கின்றவன் உன்னைப்பெற்ற தந்தையாகிய இரணியேசுவரன். அத்தகைய இரணியன் பெயரைச் சொல்லித் துதிக்க அருகர்களா யிருக்கிற பிராமண உத்தமர்களான எங்களைப் பார்க்கிலும் நீ என்ன அதிகம் தெரிந்தவனு? எங்களைவிட நீ அதிகம் கற்றவனு? அல்லது, அறிவுடையவனு? அல்லது, உயர்ந்தவனு?” என்று பிரகலாதனை நோக்கிக் கோபத்துடன் சொன்னுன்.

அப்போது பிரகலாதன், “ஐயரே! நான் அந்த ஆதிநாயகனுடைய திருநாமத்தை யன்றி

வேறொன்றும் அறியேன். எனது அறிவுக்குச் சொல்ல வேண்டியது பிறிதொன்று மில்லை. நாராயணனது அருளால் நான் கற்றுக்கொண்ட மேலான அப் பரம்பொருளினது பெயரைவிட உயர்ந்த தொன்றை நீர் எனக்குக் கற்பிக்கப் போகிறதில்லை. பழமையாகிய வேதங்களுள் கிரமமாக நிச்சயித்துச் சொல்லப்பட்ட பொருள்களுக்கெல்லாம் முடிவாகிய பரம்பொருளா யிருக்கின்ற ஸ்ரீமந் நாராயணன் எனக்குள்ளே வந்து புகுந்து என்னுடைய இதய கமலத்தைத் தனக்கு உறைவிடமாகக் கொண்டு எழுந்தருளி யிருக்கின்றான். ஆதலின், அவனைவிடப் பெறுதற்குரிய பொருள் எனக்கு வேறொன்று மில்லை. நான் அறியாதது ஏதாவது இருந்தால் அதை நீதி தவறாமல் எனக்கு ஓதுவியும். பிரமன் முதலான தேவர்கள் யாரை இடைவிடாது துதிக்கின்றார்கள்? வேதங்கள் எந்தப் பொருளைச் சொல்லுகின்றன? ஞானிகள் எந்த வஸ்துவைத் துதிக்கின்றனர்? தேவர்களும் முனிவர்களும் இடைவிடாது துதிக்கின்ற அந்த நாராயணனது திருநாமத்தை நாம் சொல்லவேண்டுமே ஒழிய வேறொன்றையும் சொல்லுதல் தகாது. அப்பெருமானை விட உயர்ந்த தொரு கடவுள் எங்கும் இல்லை என்பதை யாவரும் அறிவர். ஐயா உபாத்தியாயரே! நீரும் அந்த எம்பெருமானது பெயரைச் சொல்

லித் துதிப்பீராஞல் உமக்கும் நல்லகதி கிடைக்கும். புண்ணியவாஞவீர். நான் சொன்ன பொருளேயே நீரும் சொல்லிப் பிழையுங்கள்" என்று உபாத்தியாயரை நோக்கிக் கூறிஞன். பிரகலாதன் சொன்னதை மறுத்துக் கூறச் சண்டாமார்க்கஞல் இயலவில்லே. ஆதலின், அவன் வாய்திறவாமல் சிறிது நேரம் செய்து வைத்த பொம்மையைப்போல் அசைவற்றிருந்தான்.

## 4. பிரகலாதன் திருமந்திரத்தைக் கூறுதல்

பிரகலாதனது மொழிகளேக் கேட்டு வியப்படைந்த சண்டாமார்க்கன், "இனி யான் எவ்வாறு பிழைப்பேன். எனது உயிருக்கே முடிவு வந்ததே. இரணியனிடம் சென்று பிரகலாதனது செய்தியைச் சொல்லித் தப்பிவருவது எவ்வாறு? பிரகலாதன் சொன்ன மொழியை அவன் காதிற் கேட்டால் கொலேபுரிவானே. அதை நான் எப்படி அவனுக்குச் சொல்வேன்? 'நான் வேதம் கற்பிக்கச் சொன்ஞல் ஏதேதோ கெட்டவைகளேப் போதித்து எனது பிள்ளேயைக் கெடுத்து விட்டீரே' என்று சொல்லி இரணியன் கோபிப்பானே. ஐயோ! கொலே செய்வானே. இதுவரையிலும் சுகமாக வாழ்ந்திருந்தேன். இப்

பொழுது என்னமோ போதாத காலம் வந்திருக் கிறது. என்ன செய்வேன்?" என்று சொல்லி எண்ணுதலெல்லாம் எண்ணி முகம்வாடி நின் ருன்.

உடனே சண்டாமார்க்கன் விரைந்துசென்று இரணியனைக் கண்டு, "இரணியேசுவரனே! எங் கள் இறைவனே! உமது குமாரன் இம்மையிலும் மறுமையிலும் வாயினுற் சொல்லத் தகாததாயும், மனத்தால் நினைக்கத்தகாததாயும் இருக்கின்ற ஏதோ ஒரு சொல்லைப் பன்னிப் பன்னிச் சொல்லிக் கொண்டிருக்கிருன். ஒருவரும் அதை அவனுக் குச் சொல்லிக் கொடுத்திலர். 'வேதம ஓது' என்று நான் சொன்னுல், அதற்கு அவன் 'எல்லா வேதங்களையும், அவைகளின் அர்த்தங்களையும் நான் அறிந்திருக்கிறேன்' என்று பதில் சொல் கிருன். அவனது புத்தி மயங்கி யிருக்கிறது" என்று சொன்னுன். இரணியன், சண்டாமார்க் கனை நோக்கி, "என் மகன் சொல்லத் தகாத மொழிகள் சொன்னு னென்று சொன்னீரே! அம் மொழிகள் யாவை?" என்று சொல்ல, "ஐயா! உமது மகன் சொன்ன சொற்களை நான் எப்படி வாயினுற் சொல்வேன்? அவைகளைச் சொன்னுல் எனது நாக்கு அற்றுவிழும்; நான் பொல்லாத நரகத்தை யடைவேன்" என்று சண்டாமார்க்கன் இரணியனைப் பார்த்துச் சொன்னுன்.

பள்ளிக்கூடத்தி லிருக்கும் பிரகலாதனை அழைத்து வரும்படி ஒரு காவற்காரனை அனுப்பினான் இரணியன். காவற்காரன் சென்று பிரகலாதனுக்கு இரணியனது கட்டளையைத் தெரிவித்தான். பிரகலாதன், மிக்க மனமகிழ்ச்சி யுடன் பள்ளியை விட்டுப் புறப்பட்டு, உபாத்தி யாயரும் தன்னுடைய தந்தையும் இருக்கும் இடத்தை யடைந்து, தந்தையை வணங்கி நின் றான். தனது அருமைப் புதல்வனை இரணியன் வாரி எடுத்து, அன்பின் பெருக்கால் மணியாரம் பிரகாசிக்கின்ற தனது மார்போடு அணைத்து, முத்தமிட்டு மகிழ்ந்தான். இரணியன் மகனைத் தனது தொடைமீது உட்காரவைத்துக்கொண்டு அவனைப் பார்த்து, " அப்பா பிரகலாத! சொல்லத் தகாத மொழிகளை உன்னுடைய ஆசிரியரிடம் நீ என் சொன்னாய்? நீ சொன்ன மொழிகள் யாவை? அவற்றை யான் கேட்க விரும்புகிறேன்; சொல்லுக " என்றான்.

தனது தந்தையை நோக்கிப் பிரகலாதன், " அன்பார்ந்த தந்தையே! நான் தகாத மொழி களைச் சொல்லவில்லை. வேதம் ஓதும்போது முதலில் சொல்லுகின்ற மொழிகளையே நான் உச்சரித்தேன். அறிந்தாலும் நினைத்தாலும் கேட்டாலும் சொன்னாலும் பிறவிக் கடலைக் கடந்து பிழைப்பதற்கு உரியது எதுவோ

அதையேயான் சொன்னேன். நான் சொன்னவைகளில் குற்றமொன்றும் இலது" என்று மொழிந்தான். இரணியன், "நீ சொன்ன சொற்கள் யாவை? யான் கேட்க விரும்புகிறேன். பயப்படாது சொல்லுக" என்று பிரகலாதனை நோக்கிக் கூறினன். பிரகலாதன், தன்னுடைய தந்தையினது மடியிலிருந்து கீழே இறங்கி, அவனை நோக்கி, "நாம் விரும்பும் வண்ணம் வரங்களைக் கொடுப்பதும், ஓமங்கள் யாகங்கள் செய்தவர்களை அவைகளுக்குரிய . பதவிகளிற் சேர்ப்பதும், ஒப்பற்ற வஸ்துவானதுமாய் விளங்குகின்ற கடவுளது திருநாமத்தையே யான் சொன்னேன். அது பிரணவத்துடனே கூடிய நமோ நாராயணவென்னும் அழகிய மந்திரமே யாம்" என்று மொழிந்தான். அம்மொழிகள் இரணியனுக்குக் காதில் அம்பு பாய்ந்ததேபோல் இருந்தன. "ஆ! இப்பிள்ளைக்கு இத்தகைய கெட்ட புத்தி எப்படி உண்டாயிற்று," என்று கூறி ஏக்கமுற்றான்.

## 5. இரணியன் சினங்கொள்ளல்

ஏக்கமுற்ற இரணியனை நோக்கிப் பிரகலாதன், "இப்பூமி முதல் பிரமலோகம் வரையில் வாழ்கின்ற எண்ணிக்கை இல்லாத சராசரங்கள் யாவற்றினுள்ளும் கலந்து நிறைந்திருப்பது நான் சொன்ன அஷ்டாக்ஷரமே யன்றி வேறிலது. முக்கண் படைத்த சிவனும், நான்கு முகங்களையுடைய பிரமதேவனும், எல்லா மனிதர்களும் சொல்லித் துதிப்பது நான் மொழிந்த திருமந்திரமே. அம்மந்திரத்தை மறந்தவர்கள் இறந்தவர்களே யாவார்கள். அந்த மந்திரம் எளிதில் கிடைக்காது. அம் மந்திரத்தைச் சொல்லுதற்குரிய அதிகாரியாகிய குருவானவர் அதன் மகிமையை அறிவிக்க, பக்குவியாகிய உத்தம சீடன் அறிவான். மற்றவர்களால் அது அறியக்கூடியதன்று. அதன் நிலையை அறிவிக்கவும் அறியவும் எல்லாராலும் முடியாது. பிறப்பாகிய சமுத்திரத்தில் பழவினையாகிய சுழலினின்றும் கரையேற்றுகின்ற நல்ல மரக்கலமா யிருப்பதும், யாவர்க்கும் கிடைப்பதற்கு அருமையாகிய பூஷணமாயிருப்பதும், சொல்லுக்கு மங்களமா யிருப்பதும், முனிவர்கள் வேதத்தின் முடிவில் சிறப்புடன் தெரிந்தெடுத்த மெய்ப் பொருளுமா

யிருப்பதும் அந்த மந்திரமே. அந்த மந்திரத்தை விட உயர்ந்தது வேறொன்றும் இல்லை. அதற்கு ஒப்பான மற்றொரு மந்திரமும் எங்கும் இல்லை. தந்தையே! உம்முடைய உயிருக்கும் என்னுடைய உயிருக்கும், இவ்வுலகத்திலுள்ள எல்லா உயிர்களுக்கும் உறுதியானது அம்மகா மந்திரமே யாகும்" என்று சொன்னான்.

அம்மொழிகளைக் கேட்டதும் இரணியனுக்கு அடங்காக் கோபம் மூண்டது. கண்கள் சிவந்தன. உதடுகள் துடித்தன. தான் உட்கார்ந்து கொண்டிருந்த நாற்காலியை விட்டு எழுந்து நின்றான். பூமியைக் காலால் உதைத்தான். தனது உடைவாளை எடுத்து ஒரு கையில் பிடித்தான். மற்றொரு கையில் வேலாயுதத்தைத் தாங்கிச் சுழற்றினான். கண்களினின்று நெருப்புப் பொறிகள் உதிர விழித்துப் பிரகலாதனைப் பார்த்து, "அடா துன்மார்க்கனே! நான் பிறந்த நாள் முதல் இந்நாள் வரையில் நீ கூறிய அந்தப் பெயரைச் சொன்ன வாயையும், அப்பெயரை நினைத்த மனத்தையும் என்னுடைய வாளுக்கு இரையாக்கி வந்தேன். அப்பெயரை உனக்குக் கற்பித்தவன் யாவன்? தேவர்கள் முனிவர்கள் முதல் எல்லா உலகங்களிலுமுள்ள எல்லாரும் என்னுடைய திருவடிகளையே துதிக்கின்றார்கள். அவர்களுள் ஒரு

வனும் நீ சொன்ன பெயரைச் சொல்ல மாட்டான். அதைச் சொல்வதற்கு அவர்கள் பயப்படுவார்கள். நீ எப்படி அப்பெயரை அறிந்தாய்? அந்த விஷ்ணுவானவன் என்னை எதிர்த்து யுத்தஞ் செய்யப் பலமுறை வந்தான். என்னை வெல்ல அவனால் இயலாது திரும்பி ஓடிப்போனான். முடிவில் ஒரு முறை எனக்குப் பயந்து கருடன்மீது ஏறி வேகமாகச் சென்று கடலில் விழுந்து அமிழ்ந்து போனான். எனக்குப் பயந்து அவன் இன்னமும் அவ்விடத்திலேயே தூங்கிக்கொண்டிருக்கிறான். அந்த வலியற்றவன் பெயரை உனக்குச் சொன்னவனைக் காட்டடா? இதோ அவனை எனது வாளால் சித்திரவதை செய்கிறேன். சமுத்திரத்திலுள்ள சிறு மணலை எண்ணி அளவிட்டாலும் நம்முடைய குலத்தில் தோன்றிய பெரியவர்களை அளவிட முடியாது. அத்தனை பெரியவர்களையும் அந்தப் பாதகன் ஒருவனே கொன்றான். எலியானது தனக்குப் பகையாகிய பாம்பின் பெயரைச் சொல்லுமா? அதனால், அதற்கு என்ன பயன்? நம்முடைய பகைவன் பெயரைச் சொல்லி என் எதிரில் நீ துதிக்கலாமா? உனக்கு இந்தத் துர்ப்புத்தி வந்ததன் காரணம் என்ன? மேலேழுலகங்களையும் கீழேழுலகங்களையும் தன் வயிற்றுக்குள்ளே அடக்கி வைத்துக்கொள்ளத்

தக்க பலத்தை யுடையவனு யிருந்த எனது தம்பி யாகிய இரணியாக்கனே நீ சொன்ன படுபாவி ஒரு பெரிய பன்றியாக வடிவெடுத்துவந்து கொம்பினுற் குத்திக் கொன்முன். அத்தகைய கொடியவன் பெயரைச் சொல்ல உனக்கு அடுக்குமா? உன்னை நான் பிள்ளையாகப் பெற்றது அதற்காகவா? பெற்ற தந்தையின் பெயரைச் சொல்வதற் கல்லவா பிள்ளை பிறப்பது? எல்லா உலகங்களுக்கும், அவ்வுலகங்களிலுள்ள எல்லாப் பொருள்களுக்கும் நான் ஒருவனே தலைவன். எல்லா உயிர்களையும் உண்டாக்கல் காத்தல் அழித்தல் என்னும் முத்தொழில்களும் என்னுலே நடத்தப்படுகின்றன. இவைகளை எல்லாம் நீ நேரே பார்த்தும் என்னைவிட உயர்ந்தவன் ஒருவன் இருக்கிமுன் என்று சொல்லுகின்றனேயே. இஃது எந்த வேதத்தின் சம்மதம்? எங்குக் கற்றுத் தேறினுய்? ஆதி யந்த மில்லாத அளவிறந்த உலகங்களிலும் வேதம் எந்த வழியோ அந்த வழியைச் சார்ந்து, அது சொன்ன விதிப்படியே குற்றமற்ற நல்வினையைச் செய்தவர்கள் மேம்பா டடைவார்கள். தீவினையைச் செய்தவர்கள் தாழ்ந்தவர்க ளாவார்கள். முற்காலத்தில் மகத்தாகிய தவத்தைச் செய்ததனுல் ஹரி அரன் பிரமன் ஆகிய மூவரும், திரிமூர்த்திகளென்று யாவரும் உயர்த்திச் சொல்லத்

தக்க பதத்தைப் பெற்றனர். நான் அவர்களை விட விசேஷமாகிய தவத்தைச் செய்து அவர்களைவிட உயர்ந்தவனுனேன். நான் பெற்றிருக்கும் சிறந்த பதத்தைப் பெற அந்தத் திரிமூர்த்திகளால் இனி முடியாது. அந்த மும்மூர்த்திகளும் இப்பொழுது எனது ஆணைக்கு அடங்கி நடக்கிருர்கள். புத்தியில்லாத இளம் பிள்ளையாகிய நீ இப்பொழுது செய்த பிழையை நான் பொறுத்துக் கொண்டேன். இனிமேல் இப்படிப்பட்ட விரோதமாகிய சொற்களைச் சொல்லாதே. உனது உபாத்தியாயர் என்ன சொல்லுகிருரோ அதையே நீ சொல்லவேண்டும். உபாத்தியாயருடன் பள்ளிக்குப் போ,'' என்று சொன்னுன்.

---

## 5. பிரகலாதன் தத்துவப் பொருள்களைக் கூறுதல்

---

இரணியனது மூடத்தன்மையை யறிந்த பிரகலாதன், அவனை நோக்கி, "ஐயா! உமக்குச் சிலவற்றை நான் சொல்ல விரும்புகிறேன். நீர் அமைதியுடன் அவற்றைக் கேட்க வேண்டும். நான் சொல்லப் போகிறவை வேதமாகிய கடலுக்குக் கரையாயும், யாவரும் கற்கின்ற கல்விக்கு எல்லையாயும் இருப்பனவாகும். தந்தையே!

வித்தில்லாத விளைவு ஒன்றும் இல்லை. தனக்குள்ளே யிருந்து உலகங்களை எல்லாம் உண்டாக்கியும், தானும் அவைகளுக்குள்ளே கலந்திருந்தும், தனக்குப்பின் என்பதும் இல்லாமல் முன் என்பதும் இல்லாமல் ஒரே தன்மையாய் எக்காலத்தும் அழியாதிருக்கின்றவனுடைய மகிமையை யாவரால் அறியக்கூடும்? வேதமுடிவில் சித்தென்று தெளிந்து சொல்லப்பட்ட மெய்ப்பொருளாகிய அந்த நாராயணனது தன்மையைத் தம்மைத் தாம் அறிந்த ஞான சீலர்களே அறிவார்கள். விஷயங்களையே பொருளென்று நம்பித் தம்மைத் தாம் அறியாது துன்பக்கடலுள் ஆழ்ந்து வருந்தும் பித்தர்கள், எம்பெருமானை ஒரு காலத்தும் அறியமாட்டார்கள். மன மொழி மெய்களுக்கு எட்டாததாயும், வேதங்களிற் சொல்லப்பட்ட வாக்கியங்களாலும், உபநிடதங்களிற் சொல்லப்பட்ட வாக்கியங்களாலும், இத்தன்மையது என்று சொல்ல முடியாததாயும் இருக்கின்ற அப் பரம்பொருளை அறிவில்லாதவர்கள் அறிவார்களா? வேந்தரே! கீழ்மேல் நடுவாகிய மூன்று உலகங்களாகியும், யாவரும் யாவையு மாகியும், இவைகளுக்கு வேறுபட்டும், எங்கும் நீக்க மில்லாமல் இருக்கின்ற ஒப்பற்ற நிலைமையையுடைய பரம்பொருளைப் பிரமாதி தேவர்களும் முனிவர்களும் அறிவது அருமையாகும். நாராயணன்,

கர்மமும், அந்தக் கர்மத்தாலாகிய பயனும், அப் பயனைத் தருகின்ற கர்த்தாவும், தானாய் இருக்கின்றான். அவனுடைய அருமையையும் பெருமையையும் யாரேனும் அறிவார்களாகில், அவர்கள் பிறப்பு இறப்பு என்னும் துன்பக் கடல்களைக் கடந்து வைகுண்டம் என்னும் கரையை யடைவார்கள். அக் கடவுள், மந்திரமும், மாதவமும், அவற்றால் வரும் பிரயோசனமும், அவற்றைக் குறித்துச் சொல்லப்பட்ட தெய்வமும், வேதமும், வேள்வியும், ஆகுதியும் தானாகவே இருக்கிறான். அவரவர்கள் செய்த நன்மை தீமைகளுக்குத் தக்கபடி முறை தவறாமல் முன்னே கொடுக்கவேண்டிய பலனை முன்னே கொடுப்பதும், பின்னே கொடுக்கவேண்டிய பலனைப் பின்னே கொடுப்பதும் அந்தக் கடவுளது செயலே. எள்ளுக்குள் எண்ணெய் போல எல்லாப் பொருள்களிலும் கலந்து மறைந்திருக்கும் எம்பெருமானது பெருமையை யான் என்னென்று எடுத்துரைப்பேன்? எனது பிதாவே! எல்லா உலகங்களுக்கும், அவ்வுலகங்களில் நிறைந்திருக்கும் எல்லாப் பொருள்களுக்கும் முதற்காரணனாகிய அக்கடவுள், தனது திருநாபிக் கமலத்தின் பொகுட்டில் ஒரு புரைக்குள்ளே சராசரங்கள் எல்லாவற்றையும் அடக்கி வைத்துக்கொண்டிருக்கிறான். காண்கின்றவர்களது கண்களுக்குள்ளும் அப் பெருமான் ஒளித்

[stamp]

துக் கொண்டிருக்கிறான். பஞ்ச பூதங்களுக்குள்ளும் அவன் நிறைந்திருக்கின்றான். ...ருடைய நினைவிலும் செயலிலும் சொல்லிலும் வாழ்கிறான் அம் மாயன். இந்திரியங்கள் தோறும் சேர்ந்திருக்கிறான் அந்தப் புருடோத்தமன். இத்தகைய நிலைமையில் தானிருப்பதைப் பற்றிச் சிறிதும் நினைக்கிறவனும் அல்லன் அக்கடவுள். பரிபூரணனான அந்த இறைவனது திருநாமத்தையும், அதன் பெருமையையும் குறித்துப் பேசாதவர்கள், அவனது இருப்பை எப்படியறிவார்கள் ? காலமும், கருவியும், இடமும், பயனும், அந்தப் பயனை அநுபவிக்கின்றவனும், சீலமும் அதைக் கொடுக்கின்றவனும் தானாகவே இருக்கிறான் அப் பெருமான். எட்டெழுத்தும், மூன்று பதமும், இரண்டு சந்தியுமாய்த் தழைத்திருக்கின்றான் ஸ்ரீமந் நாராயணன். பெரியவர்கள் யோகத்தினாலும் தியானத்தினாலும் தமக்குள்ளே அந்தப் பரம் பொருளைக் கண்டு மகிழ்ந்து அடங்கியிருப்பார்கள். ஆகாசமானது மற்ற பூதங்களோடு சேர்ந்திருந்தும் அவைகளுடனே கலவாமலிருப்பது போல், அந்த முழுமுதற் கடவுள் பிருதிவி முதலிய தத்துவங்களுடனே கூடியிருந்தும், அவைகளிலெல்லாம் தாக்கற்று நிற்பவனாகியும் இருக்கிறான்; வேதங்களும் பிரமிக்கின்ற தன்மையை யுடையவனாயும் இருக்கின்றான். ஓங்கார

மாகிய ஓரெழுத்துக்குள் அதன் உயிராயும் இருக்கின்ருன். அறிவுக்கு அறிவாயும் இருக்கின்ருன். எல்லா உலகங்களிலும் நிறைந்து எங்கும் பொருந்தி யிருத்தலால், புகையும் நெருப்பும்போல் ஒருங்கே பல விடங்களிலும் பரவுந் தன்மையை யுடையவனுய் இருக்கிருன் அப் பெருமான். பல பேதமாகிய சமயங்களைப் பற்றி வாதிக்கின்ற சமய வாதிகளுடைய மாறுபாடுகளை எல்லாம் ஒழித்து, ஏகபாவனையாய்ப் பேசுகின்றவர்க ளெல்லார்க்கும், கடலும் அதிற் காணப்படும் அலையும் போலத் தன்னில் வேறுபாடு ஒன்றும் இல்லாதவனுய் விளங்குகின்ருன் அப்பரமன். இத்தகைய ஒப்பற்ற தன்மையை யுடையவனை ஸ்ரீமந் நாராயணனை நீர் இகழ்ந்து பேசுவதனுல், நீர் பெற்றுள்ள செல்வங்களும் ஆயுளும் புகழும் அழிந்து போம்," என்று இரக்கத்துடன் கூறி ஸ்ரீமந் நாராயணனைத் துதித்து நின்ருன்.

---

## 7. பிரகலாதனை இரணியன் வருத்துதல்

---

தனக்கு எதிரில் நின்று பிரகலாதன் கூறிய மொழிகளைக் கேட்டதும் அந்த இரணியனுக்குக் கொடுங்கோபம் மூண்டது. அவனது உடம்பு துடித்தது. அவனுடைய கண்கள் உதி

ரத்தைச் சிந்தின. அவன், உடனே தன்னுடைய காவலர்களைப் பார்த்து, "குடலுக்குள்ளே தினவு போல் என்னிடத்திற் பிறந்து எனது பகைவனுக்கு நான் அடிமை என்று சொல்லுகின்றான் இந்தப் பையல். இனி இவன் என்னிடம் இருக்கக்கூடாது. இவனைக் கொண்டுபோய்க் கொலை செய்யுங்கள்" என்று சொன்னான். அவ்வேளை, யமனைவிட மிக்க கொடுமையைச் செய்கின்றவர்களாகிய பல அசுரர்கள் வந்து, பிரகலாதனைப் பற்றியிழுத்துக்கொண்டுபோய் அரண்மனையின் வாயிற்படியில் நிறுத்தி, மழு, வாள், சூலம், வேல், குந்தம், கதை முதலிய அநேக ஆயுதங்களைக் கொண்டு பிரகலாதன்மீது எறிந்தார்கள். படுபாவிகளாகிய அந்த அசுரர்கள் இழைத்த கொடுமைக ளெல்லாம், நல்லொழுக்கத்தை யுடைய மெய்ஞ்ஞானியாகிய பிரகலாதனுக்குச் சிறிதும் துன்ப முண்டாக்கவில்லை. பிரகலாதன், ஸ்ரீமந் நாராயணனது திருவடிகளை மறவாமலும், அவனது திருநாமத்தை விடாமலும் துதித்துக் கொண்டிருந்ததனால், அவன் மேல் எறிந்த ஆயுதங்க ளெல்லாம் முறிந்து ஒடிந்தது. உதிர்ந்து சிறு பொடிகளாய்ப் போயின. கடவுளுடைய அடியார்களுக்கு மூடர்கள் செய்யும் தீமைகள் சிறிதும் பயன் படாமற் போகும் என்பது உண்மை யல்லவா? அந்த அசுரர்கள் எறிந்த

ஆயுதங்களால் பிரகலாதனுக்கு தனது உடம்பில் உண்டாகிய தினவைக் குறித்துச் சொறிதலாலாகும் அம்மாத்திர துன்பமும் உண்டாகவில்லை.

பிரகலாதன்மேல் எறிந்த தங்கள் ஆயுதங்களெல்லாம் அவனுக்கு ஒரு சிறிதும் துன்பம் உண்டாக்காமல் வீணாக முறிந்து பொடியாகப் போனதைக் கண்ட அந்த அசுரர்கள், வியப்படைந்து இரணியனிடம் சென்று அவனை நோக்கி, "ஐயோ! எங்கள் அரசே! நீ கட்டளையிட்ட வண்ணம் உமது குமாரனைக் கொண்டு போய் அரண்மனையின் வாயிற்படியில் நிறுத்தி அநேக ஆயுதங்களால் அவனைக் கொல்ல முயற்சித்தோம். அந்த ஆயுதங்களெல்லாம் அவனுக்குச் சிறிதும் துன்பமுண்டாக்காமல் முறிந்து தவிடு பொடியாய்ப் போயின. எங்களுக்குத் தெரிந்த வித்தைகளை எல்லாம் கையாண்டு அவனைக் கொல்ல முயற்சித்தோம். அவ் வித்தைகளெல்லாம் வீணாயின. எங்கள் கைகளும், கால்களும் தளர்ந்து போயின. நாங்கள் அடைந்திருக்கும் வருத்தத்தை இவ்வளவவ்வள வென்று சொல்ல முடியாது. அவனோ, நாங்கள் செய்த கொடுமைகளைச் சிறிதும் பொருட்படுத்தாது, சிரித்த முகத்துடன், 'நாராயணா! நாராயணா!' என்று சொல்லிக்கொண்டே

கூத்தாடுகிறுன். அவனிடம் யாதோ மகிமை யிருக்கின்றது. இனி அவனைக் கொல்ல எங்களால் முடியாது; முடியாது" என்று மிக்க வருத்தத்துடன் கூறிஞர்கள்.

கொலைக்காரர்கள் உரைத்த மொழிகளைக் கேட்டு இரணியன் அடைந்த கோபத்தைச் சொல்லவும் முடியுமோ? அவனது கண்கள் சுழன்றன. உதடுகள் துடித்தன. பற்களை 'நெறு நெறு' எனக் கடித்தான். தன்னெதிரில் நின்று கொண்டிருந்த அசுரர்களை நோக்கி, "கொடியவனுன அந்தப் பிரகலாதன் வஞ்ச நெஞ்சம் படைத்தவனு யிருக்கிறுன். அவனிடத்து ஏதோ மந்திரமிருக்கிறது. அதனுல்தான் அவன்மேல் தாக்கிய ஆயுதங்களை யெல்லாம் அவன் முறிந்து போம்படி செய்தான். அவன் கற்ற மந்திரம் எது வரையில் செல்லும் என்பதை இதோ காட்டுகிறேன். ஆ! ஆ!! எல்லாம் வல்ல கடவுளாகிய என்னிடத்திலா அந்த மந்திரம் பயன் படப் போகிறது? நல்லது, இப்பொழுது நீங்கள் சென்று பெரிய குழி யொன்று வெட்டி, அக் குழியில் பெரிய கட்டைகளை நிறைய அடுக்கி நெருப்பை மூட்டி, அந் நெருப்பு நன்ருகச் சுடர்விட்டு எரியும் போது, குல நாசனுன அந்தப் பையலை நீண்ட கயிறுகளால் குண்டு கட்டாகக் கட்டி அந் நெருப்

புக் குழியில் தள்ளிவிடுங்கள்" என்று பாவியாகிய இரணியன் சொன்னான்.

கொடியவர்களாகிய அந்த அசுரர்கள் விரைந்து சென்று, அந்நகரத்துக்கு வெளியில் அதிக அகலமும் நீளமும் ஆழமும் உள்ளதாக ஒரு பெரிய குழி தோண்டினார்கள்; அக்குழியில் பருத்த புளியங் கட்டைகளை மலையைப் போல் மேலும் மேலும் நிறைய அடுக்கினார்கள்; பல்லாயிரம் குடங்கள் நிறைய எண்ணெயும் நெய்யும் கொண்டு வந்து அந்தக் குழியில் கொட்டி நெருப்பு மூட்டினார்கள்; நெருப்பு நன்றாகப் பற்றி எரியும்போது அறிவிற் சிறந்த பிரகலாதனைச் சிறிதும் இரக்க மின்றி அக்குழியில் தள்ளினார்கள். தெய்வ நாயகனான ஸ்ரீமந் நாராயணனது திருவடிகளைத் துதித்துக் கொண்டே அக்குழியில் விழுந்தான் பிரகலாதன். அண்டினவர்களை ஆதரிக்கும் ஆதிகேசவனது அருளால், பிரகலாதனுக்கு அந்த நெருப்பு யாதொரு தீங்கும் விளைவிக்காது குளிர்ந்த சீதள சந்தனக் குழம்பைப் போலாய்விட்டது. கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்பது உண்மையேயல்லவா?

நெருப்பிலும் பிரகலாதன் வேகாமல் இருந்ததைக்கண்ட அந்த அசுரர்கள், விரைந்து சென்று, இரணியனை யணுகி, அவனைப் பார்த்து,

“உமது குமாரனை நீர் சொன்ன வண்ணம் செய்து நெருப்புக் குழியில் தள்ளினோம். அந்த நெருப்பானது எள்ளளவும் அவனுக்குத் துன்ப முண்டாக்கவில்லை. அவன் சுகமாக அந்தக் குழியின் மத்தியில் உட்கார்ந்து கொண்டு, மிக்க மனமகிழ்ச்சியுடன், ‘நமோ நாராயணாய’ என்று இடைவிடாமல் சொல்லிக்கொண் டிருக்கிறான்” என்று சொன்னார்கள்.

அம் மொழிகளைக் கேட்டுக் கொடியவனான இரணியன் வியப்படைந்து, “அப்படியா! அந்த நெருப்பைப் பிடித்துச் சிறையிலிடுங்கள். அந்தத் திருட்டுப் பையலைப் பாம்புகளை விட்டுக் கடிக்கச் செய்யுங்கள்” என்று மிக்க கோபத்துடன் கூறினான். அந்த அசுரர்களும், அனந்தன், வாசுகி, சங்கன், குளிகன், பதுமன், மகா பதுமன், தக்ஷகன், கார்க்கோடகன் என்னும் எட்டுப் பெரிய பாம்புகளை வரவழைத்து இரணியனது கட்டளையை அப் பாம்புகளுக்குத் தெரிவித்தார்கள். அந்தப் பாம்புகள் மிக்க கோபம் கொண்டு பிரகலாதனிடம் சென்று, இரைச்சலிட்டுச் சீறிப் பிரகலாதனுடைய அழகிய உடம்பில் வாளைப்போல் நீண்டு வளைந்து கூர்மையா யிருக்கின்ற பற்கள் நன்றாக ஊன்றும்படி கடித்தன. கடித்தவுடனே அந்தப் பாம்புகள் படங்கள் விரித்துக் கொண்டு ஆடின; தரையிலும் புரண்டன. அப்பொழுது பிரகலாதன்

தெய்வ நாயகனது திருநாமத்தையே சொல்லிக் கொண்டிருந்தான். அப் பாம்புகள், பிரகலாதனது உடல் முற்றும் காளி, காளாத்திரி, யமன், யம தூதன் என்னும் நான்கு பற்களும் தைத்து உருவ எழும்பி எழும்பிக் கடித்ததனுல், அவைகளின் பற்கள் வலியற்று ஒடிந்து உதிர்ந்தன. பிரகலாதனது உடம்பில் பாம்புகள் கடித்த இடங்கள் தோறும் விடம் பாயாமல் அமுதம் ஊறியொழுகியது. பாம்புகள் வெட்க மடைந்து திரும்பின.

நாகங்கள் கடித்ததனுலும் பிரகலாதனுக்குச் சிறிதும் துன்பம் நேராததைக் கண்டு அந்த அசுரர்கள் பயந்தார்கள். உடனே, அவர்கள் இரணியனிடம் சென்று, நாகங்களின் செய்கைகள் பயன்படாமல் ஒழிந்ததைத் தெரிவித்தார்கள். “பூமியை எட்டுத் திக்குகளிலும் தாங்கிக்கொண்டிருக்கிற மிக்க பலம் படைத்த யானைகளைக் கொண்டுவந்து பிரகலாதன் மீது ஏவி, அவைகளின் கால்களால் இடறச் செய்து அந்தப் பையலைக் கொல்லுங்கள்,” என்று இரணியன் கட்டளை யிட்டான். அசுரர்கள் விரைந்து சென்று, இந்திரன் ஏறுவதும், கொடியதும், மிக்க கோபத்தை யுடையதும், அதிக பலத்தை யுடையதும், நான்கு கொம்புகளை யுடையதும், ஐராவதம் என்னும் பெயரை யுடையது மாகிய

வெள்ளை யானையைக் கொண்டுவந்து நிறுத்தி, பிரகலாதனை கயிறுகளால் இறுக்கி ஒடிக்கிக் கட்டி எடுத்துக் கொண்டுபோய் அந்த யானையின் முன் போட்டார்கள். அக்காலத்தில், மெய்ப்பொருளை யறிந்தவனான பிரகலாதன் அந்த யானையைப் பார்த்து, "ஐராவதமே! உனது தாயைப் பெற்ற பாட்டனாகிய கஜேந்திரனை முற்காலத்தில் ஒரு முதலை விழுங்கப் பிடித்தது. அப்பொழுது அந்தக் கஜேந்திரன் 'ஆதி மூலமே' என்று அழைக்க, அதன் முன்னர் வந்து தோன்றி முதலையைக் கொன்று, அந்த யானையைக் காத்த **கஜேந்திர வரதன்** என் மனத்தினிடத்தில் வந் திருக்கிறான்" என்று கூறினன்.

அச் சொற்களைக் கேட்டு அந்த வெள்ளை யானை, "ஓ! இவன் அரிபக்தன். இவனை நான் துன்பப்படுத்தப்படாது" என்று நினைத்துப் பிரகலாதனை மும்முறை வலம் வந்து அவனது அடிகளில் வணங்கித் தனதிடம்போகத் திரும்பிற்று. ஐராவதத்தின் செய்கையை அசுரர் களால் யறிந்த இரணியன், அந்த அசுரர்களை நோக்கி, "என்னைக் கண்டு பயந்து கடலில் விழுந்து மறைந்த விஷ்ணுவை ஒரு பொருளாக மதித்து அந்த யானை பிரகலாதனைக் கொல்லாது செல்லலாயிற்று அல்லவா? அதன் கர்வத்தை நான் அறிகிறேன். அதைப் பிடித்துக்கொண்டு

வந்து சித்திரவதை செய்யுங்கள்" என்று மிக்க கோபத்துடன் கூறினன். அசுரர்களும் ஐரா வதத்தைக் கொல்ல முயற்சித்தார்கள். அப் பொழுது அந்த யானை, "இரணியனே மிக்க கொடியவன். அவன் அழிவதற்குக் காலம் கிட்டி விட்டது. அதனால்தான் அரிபக்தியிற் சிறந்த பாலனைக் கொல்ல முயற்சிக்கிறான். பிரகலாதனைக் கொல்ல இந்த இரணியனால் முடியுமா? நான் அந்த ஞானியின் மீது ஏறினாலும் அவன் இறக்கப்போகிறதில்லை. நான் என் வீணைகச் சாகவேண்டும்?" என்று எண்ணி மனந்துணிந்து பிரகலாதனிடம் சென்றது. அந்த யானை நாராயண னது திருவடிகளை மனத்திற் கொண்டு பிரகலாத னது மார்பில் தனது கொம்புகளை வைத்து அழுத் திற்று. அந்தத் தந்தங்கள் நான்கும் இள வாழைத் தண்டைப்போல் முறிந்தன. அந்த யானையும் வலிவற்றுக் கீழே விழுந்தது. உடனே அசுரர்கள் ஓடிப்போய் இரணியனுக்கு இச் செய்தியை யறிவித்தார்கள்.

இரணியன் மிக்க கோபத்துடன் அசுரர் களைப் பார்த்து, "ஏழு நிலைகளை யுடைய எனது உயர்ந்த அரண்மனையின் வாயிற் கோபுரத்தினது சிகரத்தின்மேல் அந்தக் கொடியவனை ஏற்றிக் கீழே தள்ளிக் கொல்லுங்கள்" என்று மொழிந் தான். அவர்களும் ஆகாயத்தை யளாவிய அந்தச்

சிகரத்தின்மேல் பிரகலாதனைக் கொண்டுபோய்ப் பூமியில் விழத் தள்ளினார்கள். அக்காலை, பூமி தேவி அப்பிள்ளைக்குக் கொஞ்சமும் வருத்தம் நேராவண்ணம் மெதுவாகத் தனது மலர்போன்ற கைகளாற் பிடித்துப் பூமியில் விட்டாள். அது கண்டு இரணியன், பிரகலாதனை ஒரு பெரிய பாறைக் கல்லுடன் சேர்த்து உறுதியாகக் கட்டிக் கடலில் தள்ளிவிட அசுரர்களுக்குக் கட்டளை யிட்டான்.

அசுரர்கள் சிறிதும் இரக்கமின்றிப் பிரகலாதனை ஒரு பெரிய பாறைக் கல்லுடன் சேர்த்துக் கட்டிக் கடலில் தள்ளிவிட்டார்கள். எங்கும் நிறைந்திருக்கும் எல்லாம் வல்ல திருநாராயணனை இடைவிடாது துதித்துக் கொண்டிருந்த பிரகலாதனுக்கு அந்த நாராயணனது அருளால் பாதாளம் வரையில் ஆழ்ந்திருந்த அக்கடல் முழங்கால் அளவு ஆழமுள்ளதாக இருந்தது. அந்த அன்பனுடன் சேர்த்துக் கட்டிய பாறைக் கல்லானது சுரைக் குடுக்கையைப்போல் தண்ணீருக்குமேல் மிதக்கலாயிற்று. மகா பிரளய காலத்தில் அலைகள் மோதுகின்ற கடலின் மத்தியில் ஆலிலையின்மேல் குழந்தை வடிவத்துடன் யோக நித்திரை செய்யும் நாராயணனைப் போல் இருந்தது பிரகலாதன் பாறையின்மீது படுத்துக் கடலில் மிதந்த தோற்றம்.

தனக்கு யாதொரு துன்பமு மின்றிப் பாறையின் மீது வீற்றிருந்த பிரகலாதன், தலையின்மீது கைகளைக் கூப்பிக்கொண்டு, அடியவர்களைத் தமது கண்ணேபோல் காக்கும் கருணையங் கடலாகிய திருமகள் கொழுநனுடைய திருநாமங்களைச் சொல்லி, உள்ளடங்கா உவப்புடன் துதித்தான். பிரகலாதனது நிலைமையை யறிந்து அசுரர்கள் விரைந்து சென்று இரணியனிடம் தெரிவித்தார்கள். "கடலில் வருத்தமின்று மிதந்துகொண்டிருக்கும் அவனை என்முன் கொண்டுவந்து விடுங்கள்" என்று இரணியன் கட்டளையிட அந்த அசுரர்கள் அதன்படி பிரகலாதனைக் கொண்டுவந்து இரணியன் முன்னர் நிறுத்தினார்கள். அவ்வேளை, "இவனுக்கு விஷம் கலந்த அன்ன பானாதிகளைக் கொடுத்துக் கொல்லுங்கள்" என்று இரணியன் அசுரர்களுக்குச் சொன்னான். அவர்களும் அவ்வாறே செய்தார்கள். அதனாலும் பிரகலாதனுக்குத் துன்பம் உண்டாக வில்லை. இருப்புப் பலகையின்மேல் பிரகலாதனைப் படுக்க வைத்துச் சம்மட்டிகளைக் கொண்டு அவன் மேல் அடித்துக் கொல்லச் சொன்னான் இரணியன். கொலையாளிகள் அவ்வாறு அடித்தும் எம்பெருமானது அருளால் அந்த அடிகளெல்லாம் பிரகலாதனுக்குப் பூக்கள் மேல் விழுவதைப்போல இருந்தன.

அடித்தவர்களது கைகள் ஒடிந்து பாழாயின. அசுரர்களெல்லாரும் வியப்படைந்தார்கள்; அஞ்சி நடுங்கினார்கள். "இவனைக் கொல்ல நம் மாலும் ஆகாது, இவனைப் பெற்ற தந்தையினா லும் ஆகாது;" என்று அருவருப்புடன் கூறி னார்கள். இரணியனிடம் சென்று அவர்கள் செய்த செயல்களையும் பிரகலாதனது சிறப்பை யும் சொன்னார்கள்.

## 8. இரணியனுக்கும் பிரகலாதனுக்கும் ஸம்வாதம்

செய்ய ஒண்ணாத கொடுமை செய்தும் பிரக லாதன் இறவாததைக் கண்டு இரணி யன், "இவனிடத்தில் ஏதோ மாயை இருக்கி றது. அதனாலே தான் என்ன செய்தாலும் இவனது உடல் சிதையாமல் இருக்கிறது; இவ னது உயிரும் பிரியாமல் இருக்கிறது. அந்த மாயையை இதோ நான் அறிகிறேன். இனி நானே இவனை எனது வாளால் வெட்டி எறி கிறேன்," என்று சொல்லித் தனது உடை வாளைக் கையிலே தாங்கி மிக்க கோபத்துடன் பிர கலாதனை யணுகினான். அப்பொழுது பிரகலா தன் தன்னுடைய தந்தையைப் பணிந்து, "ஐயா! எனது உயிரை வாங்க நீர் ஏன் வருத் தப் படவேண்டும்? நீர் செய்யத் துணிந்த காரி

யம் உம்மால் செய்து முடிக்கக்கூடுமா என்பதை முன்னர் நன்ருக ஆராய்ந்து பாரும். எல்லா உலகங்களையும் படைத்த ஸ்ரீமந் நாராயணனுக்குரிய எனது உயிரை உம்மால் வாங்க முடியுமா?" என்று இரணியனைப் பார்த்து மொழிந்தான். அதைக் கேட்டு இரணியன், "அடா மூடா! உலகங்களை எல்லாம் உண்டாக்கினவன் நான் அல்லவா? மும்மூர்த்திகளும், தேவர்களும், முனிவர்களும் என் பெயரை அல்லவா சொல்லித் துதித்துக் கொண்டிருக்கிருர்கள்? உலகங்களை யுண்டாக்கினவன் என்னை விட வேறே ஒருவன் இருக்கின்ருன் என்று சொல்லுகின்றனையே. அவனை எனக்குக் காட்டுவாயாகில் நான் உனது பேச்சை மெய்யென்று நம்புவேன்" என்று பிரகலாதனை நோக்கிக் கூற, அதற்குப் பிரகலாதன், "எல்லா உலகங்களையும் படைத்தவனும், அவைகளுக் குள்ளிருக்கின்ற நானு பேதமாகிய உயிர்களைப் படைத்தவனும், அந்த அழியாத உயிர்கள் தோறும் மறைந்திருந்து அங்கங்கே வாசஞ் செய்பவனும் அரி என்னும் ஒரே கடவுள்தான். அக் கடவுள், பூவினிடத்தில் மணமும் எள்ளினிடத்தில் எண்ணெயும் போலப் பல பொருள்களிலும் கலந்து நிறைந்திருக்கிருன். அவன் என் கண்ணினுல் நோக்கிப் பார்ப்பதற்கு எவ்விடத்திலும் இருக்கின்ருன்.

உம்மிடம் நான் அவனைக் குறித்து அன்புடன் சொன்னால் நீர் நம்பாமல் போனதால் அவனை உமது கண்களால் பார்க்க முடியவில்லை. உமக்கு இளையவனை இரணியாக்கனது உயிரை மாய்த்த அந்தத் தாமரைக் கண்ணன் உமது கண்களாற் பார்ப்பதற்கு இலேசாகக் கிடைக்கமாட்டான். சாத்துவிகம், ராஜசம், தாமசம் ஆகிய முக்குணங்களும் அவனுடையன. ஆக்கல், அளித்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களும் அவனுடையனவே. வெண்மை, பசுமை, செம்மையாகிய மூவுருவங்களும் அவனுடையனவே. சந்திரன், சூரியன், அக்கினியாகிய முச்சுடர்களும் அவனுடைய கண்களே. காருகபத்தியம், தக்ஷிணாக்கினி, ஆகவனீயமாகிய வேதாக்கினிகள் மூன்றும் அவனுடையனவே. சுவர்க்க மத்திய பாதாள மென்னும் மூன்றுலகங்களும் அவனுக்குச் சொந்தமே. முதலும், நடுவும், முடிவும் உண்டாயிருக்கின்ற பொருள்களுக் கெல்லாம் அம் முழுமுதற் கடவுளே சாக்ஷியாயிருக்கிறான். இதுவே வேதத்தின் முடிவு. இதுவே சத்தியம்" என்று தனது தந்தைக்கு எடுத்துரைத்தான்.

அம்மொழிகளைக் கேட்டு இரணியன் கலகலவென்று நகைத்தான். "அடே! உலகத்திலுள்ள பல பொருள்களிலும் அந்த அரி என்

னும் ஒருவன் கலந்து நிறைந்து மறைந்திருக்கின்ருன் என்று சொல்லுகின்றனையே! அதை நான் கண்டு பிடிக்கவேண்டும். அதற்குத் தக்க வண்ணம் இதோ செய்கிறேன். நீ சொன்ன அந்தத் திருடன் எல்லாப் பொருள்களிலும் இருக்கிருன் என்பதை எனக்குத் திருஷ்டாந்தப் படுத்திக் காட்டுப் பார்ப்போம்" என்று பிரகலாதனைப் பார்த்து இரணியன் சொன்ஞன். பிரகலாதன், "நான் சொன்ன அந்த நாராயணன் சாணிலும் இருக்கின்ருன். அணுவிலும் இருக்கின்ருன். அந்த அணுவைப் பல கூருகச் செய்யப்பட்ட பரமாணுவிலும் இருக்கின்ருன். மகமேருவிலும் இருக்கின்ருன். இதோ இவ்விடம் இருக்கின்ற தூணிலும் இருக்கின்ருன். நீர் சொன்ன சொல்லிலும் இருக்கின்ருன். அவன் இல்லாத பொருள் ஒன்று எவ்விடத்தும் இல்லை? இதை நீர் கண்கூடாகப் பார்க்க வேண்டுமானல் விரைவில் சோதித்துப் பார்த்துக் கொள்ளும்," என்று இரணியனைப் பார்த்துக் கூறினன்.

அப்பொழுது இரணியன், பிரகலாதனைப் பார்த்து அதட்டி, அடே! "உனக்கும் தேவர்களுக்கும் ஒத்தவனுகி இவ்வுலக மெங்கும் நிறைந்திருக்கின்ற அந்த மகாவிஷ்ணுவை இதோ நிற்கின்ற இந்தத் தூணினிடம் நீ காட்டவேண்டும். காட்டத் தவறினல், மத்தகத்தை யுடைய பெரிய

மதயானையைச் சிங்கம் அறைந்து கொல்வது போல உன்னை நான் கொன்று, உன்னுடைய இரத்தத்தைக் குடித்து, உனது உடலையும் தின்று விடுவேன்" என்றான். அதற்குப் பிரகலாதன், "என்னைக் கொல்லுகின்றதாக நீர் அடிக்கடி சொல்லுகின்றீரே, எனது உயிரானது உம்மால் கொல்லுவதற்கு அவ்வளவு எளியதல்ல. நான் முன்னே உமக்குச் சொன்ன எல்லாம் வல்ல இறைவன் நீர் குறித்த குறித்த இடங்களிலெல் லாம் காணுமற் போவானாகில் என்னுயிரை நானே மாய்த்துக் கொள்ளுவேன்," என்று பதி லுரைத்தான்.

---

## 9. நரசிங்கமூர்த்தி இரணியனைக் கொல்லுதல்

---

புத்திக் கூர்மையுள்ள பிரகலாதன் மொழிகளைக் கேட்டு அந்த இரணியன், "நல்லது, நல்லது" என்று சொல்லித் தலை யசைத்து, மிக்க வலிவுள்ள தனது வலக்கையை உயர வெடுத்து மிக்க கோபத்துடன் ஓங்கி எதிரிலிருந்த தூணை யறைந்து, "எங்கே நீ சொன்ன அரி?" என்று பிரகலாதனைக் கேட்டான். அக்காலத்தில் அந்தத் தூணினுள்ளிருந்து ஒப்பற்ற ஆற்றல் வாய்ந்த சிவந்த கண்களையுடைய ஒரு சிங்க மானது, ஆரவாரத்தால் திக்குகள் கிழிந்து

அண்டகோளத்தைப் பிளவுபடும்படி சிரித்தது பிரமனும், மற்றைய தேவர்களும் காணுதற்கு அரியவனும் எட்டாத தூரத்திலுள்ளவனுன திருமால் சிங்க வடிவத்தோடு தூணினுள்ளிருந்து சிரித்தவுடனே, பிரகலாதன் எழுந்து கூத்தாடினன். ஆனந்தக் கண்ணீர் விட்டு அழுதான். பாடித் துதித்தான். கைகளைத் தலைமேற் கூப்பித் தொழுதான். கீழே விழுந்து வணங்கினுன். துள்ளித் துள்ளி எழுந்து ஓடினுன்.

இரணியன் கொக்கரித்து, "தூணிலிருந்து சிரித்த நீ யாரடா? இந்தப் பையல் சொன்ன நாராயணன் நீதானு? எனக்குப் பயந்து முன்ஞெருநாள் நீ கடலில் விழுந்து ஒளித்துக் கொண்டனேயே! இப்பொழுது இந்தத் தூணினிடம் வந்து ஒளித்துக் கொண்டிருப்பதன் காரணம் என்ன? என்னை எதிர்த்து யுத்தம் பண்ணத்தக்க வலிவு உனக்கு இருக்குமாகில் தூணை விட்டுப் புறப்படடா; புறப்படடா" என்று சொல்லி ஆரவாரம் செய்து நின்முன்.

அக்காலை அண்டம் வெடித்ததுபோலப் படீர் என்று அந்தத் தூண் பிளந்தது. அதிலிருந்து உக்கிர நரசிங்கமூர்த்தி கிளம்பினுர். உடனே அந்த நரசிங்கம் எட்டுத் திக்குகளையும் அளாவி வளர்ந்தார். உலகமுற்றும் பரவியிருந்த இரணியனது அசுரசேனைகளாகிய ஆயிரங்கோடி

வெள்ளங்களையும் அந்த நரசிங்கமூர்த்தி தம்முடைய கைகளால் அள்ளிக் கொண்டார். ஒருவனையும் விடாது கசக்கிப் பிழிந்து எறிந்தார். இரணியனும் அவனது மைந்தனுமே எஞ்சி நின்றனர். அப்பொழுது பிரகலாதன், "தந்தையே! இப்பொழுதாகிலும் இந்த நரசிங்கமூர்த்தியை வணங்கித் துதியும். இந்தக் கருணையங்கடல் உமக்கு யாதொரு குறைவும் நேராவண்ணம் காப்பார். நீர் நீடூழிகாலம் இன்பமாகவும், ஏகச்சக்ராதிபதியாகவும் வாழ்ந்திருக்கலாம்," என்று இரணியனைப் பார்த்துக்கூற, அக்கொடியவன் "அடே பிரகலாதா! இந்த நரசிங்கத்தினது தோள்களையும் கால்களையும் வெட்டித் தள்ளிவிட்டு, எனது வாளை வணங்குவேன்; இதோ பார்," என்று அண்டங்களெல்லாம் நடுங்கச் சொல்லிக் கையில் வாளை ஏந்தி ஆரவாரத்துடன் நரசிங்கமூர்த்தியை எதிர்க்கப் போனான்.

நரசிங்கமூர்த்தி தமது கைகளால் இரணியனது கால்களை வாரிப் பிடித்து உயர வெடுத்துக் கிறுகிறுவென்று சுழற்றினர். சிறிதுநேரம் வேடிக்கையாக இரணியனுடன் யுத்தம் செய்த பின்னர் அந்த நரசிங்கப்பிரான், இரணியனைப் பிடித்து, அவனது அழகிய அரண்மனையின் வெளி வாயிற்படியில் அந்திவேளையில் தமது தொடையின் மேல் வைத்துக்கொண்டு, அவனது மார்பைப்

பிளந்து உதிரத்தைக் குடித்து அவனது உயிரைப் போக்கினர்.

---

## 10. பிரகலாதன் அரிய வரங்களைப் பெறுதல்

இரணியனுக்குப் பயந்து ஓடிப்போய்த் தாங்கள் இருந்த இடந்தெரியாமல் மறைந்திருந்த எல்லாத் தேவர்களும், முனிவர்களும், அந்த இரணியன் மடிந்தவுடன் நரசிங்க மூர்த்தியினிடம், வந்து அவர் கொண்டிருந்த உருவத்தைக் கண்டு பயந்து, தலைகளின்மேல் கரங்களைக் கூப்பித் தொழுதார்கள். பிரகலாதன் நரசிங்கப் பெருமானது பாதங்களைப் பலமுறை வணங்கிப் பயபக்தியுடன் துதித்தான்.

மிக்க அன்புடன் தம்முடைய பாதங்களை வணங்கிய பிரகலாதனைப் பார்த்து நரசிங்கப் பெருமான், "அன்பனே! உன்னுடைய தகப்பனை யாம் உனது கண்ணெதிரே கொன்று அவனுடைய உயிரைப் போக்கின காலத்தும் நீ எம்மிடம் சிறிதும் வெறுப்படையாமல் எம்மைத் துதித்துக் கொண்டிருந்தனையே! நீ எம்மிடம் கொண்ட அன்பைக் கண்டு வியந்தோம். உனக்கு யாம் என்ன கைம்மாறு செய்வோம்? இனி எல்லையில்லாத குற்றங்களைச் செய்தனராயினும் உனது குலத்திற் பிறந்தவர்களை யாம்

கொல்லமாட்டோம். உனக்கு எப்பிறப்பிலும் யாம் நல்லவராகவே இருப்போம். இன்னும் உனக்கு யாதேனும் வரம் வேண்டியதாயிருந்தால் விரைவில் கேட்டுப் பெற்றுக்கொள்," என்று திருவாய் மலர்ந்தருளினர்.

பிரகலாதன் அப்பெருமானை வணங்கி அவரை நோக்கி, "ஒப்பற்ற எனது ஐயனே! தேவரீரது திருவருளால் இதுவரையில் யான் அடைந்த நன்மைகளோ எல்லேயில்லாதவை. இன்னும் யான் பெறவேண்டிய நன்மை யாது உளது? ஆயினும், எலும்பில்லாத இழிந்த பிறப்பாகிய புழுவின் ஜன்மத்தை யான் அடைந்தாலும் உம்மிடமும், உம்முடைய அடியாரிடமும் யான் மிக்க அன்புடையவனுயிருத்தல் வேண்டும். எனக்கு இந்த அருமையான வரத்தைத் தந்தருளல் வேண்டும்," என்று மிக்க வணக்கத்துடன் கேட்டான்.

அங்ஙனம் கேட்ட பிரகலாதனை நாசிங்கப் பெருமான் பார்த்து, "அப்பா பிரகலாதா! எல்லாப் பூதங்களும் எல்லாப் பிராணிவர்க்கங்களும் அழிந்தாலும் நீ எம்மைப்போல எந்நாளும் வாழ்ந்திருக்கக் கடவாய். உலகங்களும் உனக்கு அடிமையாகும். எல்லா உலகங்களிலும் உள்ள உயிர்களனைத்தும், எம்மைத் தொழுதால் அடையும் பயனை உன்னைத் தொழுதால் அடையக் கட

வன. நீ தானவர்களுக்கும் வானவர்களுக்கும் அரசனாய் விளங்கக்கடவாய். இத்தகைய பேறு உன்னை யன்றி வேறெவர்க்கும் கிடைக்காது. தருமமும், சத்தியமும், நான்கு வேதங்களும், சிறந்த அருளும், பெரிய ஞானமும், பொறுமையும், எல்லாப் பொருள்களும், எண்குணங்களும் உனது சொற்படி உனக்கு ஏவல் செய்யக்கடவன. இனி உனக்கும் எமக்கும் யாதொரு பேதமும் இல்லை. நீ எம்மைப்போலவே சிறப்புற்று எந்நாளும் வாழ்வாயாக," என்று திருவாய்மலர்ந்தருளி, பின்னர், எல்லா உலகத்தவர்களும் கைகூப்பி வணங்கவும் அரண்மனை வாயிலில் பேரிகை முதலிய வாத்தியங்கள் முழங்கவும், நரசிங்கப் பெருமான் பிரகலாதனுக்குத் திருமுடி சூட்டி இராஜ்யத்தை யாள அருளிச் செய்தார். அக்காலை, அங்கு வந்திருந்த தேவர்களை நோக்கி நரசிங்கப்பிரான், "அமரர்களே! நீங்க ளெல்லாரும் எம்முடைய அன்பன் பிரகலாதனுக்கு அடிமைத் தொழில்களைச் செய்வீர்களாக," என்று சொல்லிக் கட்டளை யிட்டார். பிரகலாதன் அப்பெருமானை வணங்கி வலம் வந்து துதித்தான். நரசிங்கமூர்த்தி பிரகலாதனுக்கு ஆசி கூறி மறைந்தருளினார். மூன்று உலகங்களையும் தன்வசத்திற்கொண்டு பிரகலாதன் இனிதாகச் செங்கோல் செலுத்தி வாழ்வானானன்.

முற்றிற்று.

P. R. RAMA IYAR AND CO., PRINTERS, MADRAS.

# ரா. லோகநாதம் பிள்ளை
## பிரசுரித்த தமிழ்ப் புத்தகங்கள்

* சென்னை துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பெற்றவை

### ஓத்தி. ஸம்பத்து ஐயங்கார் இயற்றியவை

| | | | |
|---|---|---|---|
| கமலாஸனி ... ... ... | 1 | 0 | 0 |
| கமலபவன அற்புதம் ... ... ... | 0 | 12 | 0 |
| கமலவதனு ... ... ... | 0 | 6 | 0 |
| * பரிமள ரோஜா ... ... ... | 0 | 6 | 0 |
| * சகந்தமாலினி ... ... ... | 0 | 6 | 0 |

### பூ. அ. பாஷ்யமையங்கார், பி. ஏ., எல். டி., இயற்றியவை

| | | | |
|---|---|---|---|
| * ஆழ்வார்கள் சரித்திரம் ... ... | 0 | 8 | 0 |
| * நால்வர் சரித்திரம் ... ... | 0 | 8 | 0 |

### ம. க. ஜயராம் நாயுடு இயற்றியவை

| | | | |
|---|---|---|---|
| * பத்தினிப் பெண்டிர் ... ... | 0 | 12 | 0 |
| முப்பெருங்காப்பியக்கதைகள் ... ... | 0 | 10 | 0 |
| * பாலபக்தர்கள் ... ... ... | 0 | 10 | 0 |
| * சதி அநசூயை ... ... ... | 0 | 8 | 0 |
| * சதி சுலோசனை ... ... ... | 0 | 6 | 0 |
| * துருவன் ... ... ... | 0 | 3 | 0 |
| * மார்க்கண்டேயன் ... ... ... | 0 | 3 | 0 |
| * விசாரசன்மன் ... ... ... | 0 | 3 | 0 |

ரா. லோகநாதம் பிள்ளை,
76, வால் டாக்ஸ் ரோட்டு, சென்னை.